செ.வெ.எண். நாள் : 10.09.2020

**விருதுநகர் மாவட்டம்**

**மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழுக் கூட்டம் 2020-2021**
**விருதுநகர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.ப.மாணிக்கம் தாகூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது**
**---**

விருதுநகர் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் உறுப்பினர் செயலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு துணைத்தலைவர்/ தென்காசி நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.தனுஷ் எம்.குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத்தலைவர்/விருதுநகர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.ப.மாணிக்கம் தாகூர் அவர்கள் தலைமையில் மத்திய மாநில அரசுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதிகள் மூலம் விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து துறை வாரியாக இன்று (10.09.2020) ஆய்வு மேற்கொண்டார்கள்.

விருதுநகர் மாவட்டத்தில், 2020-21-ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், விருதுநகர் மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களான பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம், சான்சத் ஆதார் - கிராம் யோஜானா திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (PMAY(G), தூய்மை பாரத இயக்கம் (கி), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்(TNSRLM), தீனதயாள் உபாத்தயாய கிராமின் கௌசல்யா ஜோதி யோஜனா (DDUGJY), தேசிய சமூக பாதுகாப்பு திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்- நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் (PMAY(Urban)), தூய்மை பாரத இயக்கம் - நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் (SBM), அம்ருத் திட்டம், பிரதம மந்திரி விவசாய நீர் பாசனத்திட்டம், நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம், பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY), இராஷ்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY), மண்வள அட்டை (SHC), பரம்பரக்கத் கிருஷி விகாஸ் யோஜனா (PMVY), தேசிய விவசாய வளர்ச்சித் திட்டம், இணையத்தள விவசாய பொருட்கள் விற்பனை திட்டம்(e-NAM), பிரதம மந்திரி ஆதர்ஸ் கிராம் யோஜனா (மத்திய அரசின் பழங்குடியினர் நலத்திட்டங்கள்), தீனதயாள் உபாத்யாய கிராம் ஜோதி யோஜனா, ஒருங்கிணைக்கப்பட்ட மின்மேம்பாட்டு திட்டம் (IPDS), தேசிய நலக்குழுமம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம், மதிய உணவு திட்டம், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா, டிஜிட்டல் இந்தியா - பொது தகவல் மையம், தேசிய நெடுஞ்சாலை - மத்திய சாலை திட்டம், பிரதம மந்திரி கனிஜ் சிட்ரா கல்யாண் யோஜனா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், பிரதம மந்திரி வேலை வாயப்புத் திட்டம், பொது விநியோகத் திட்டம், நில ஆவணங்கள் கணினி மயமாக்குதல் (Digitalization of Land Records) உட்பட பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்து துறை வாரியாக ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், நடைபெற்று வருகின்ற பணிகளையும், மேற்கொள்ளப்படவுள்ள பணிகளையும் விரைவாகவும், துரிதமாகவும் முடித்திட சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத்தலைவர்/விருதுநகர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.ப.மாணிக்கம் தாகூர் அவர்கள் அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்கள்.

மேலும், மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் இன்னும் அதிகமான வேலைகள் எடுத்து, பணியாளர்களுக்கு அதிகமான மனித சக்தி வேலைநாட்கள் கொடுக்க வேண்டும். அதுமட்டும்மல்லாமல் 2019-2020ம் ஆண்டில் எடுக்கப்பட்ட நூறு நாள் வேலைகள் அனைத்தையும் விரைவாக முடிக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலர்களும் ஊராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் ஊராட்சி செயலர்களை அவ்வப்போது அழைத்து தங்களது ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். நூறு நாள் வேலையாட்கள் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களின் விவசாய நிலங்களில் பண்ணைக்குட்டை அமைத்தல், தடுப்பணை அமைத்தல், வரப்பு கட்டுதல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பணிகள் மேற்கொள்ளலாம் என்ற தகவல்களை விவசாயப் பெருமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதுபோன்று 07 நகராட்சிகள் மற்றும் 11 ஊராட்சி ஒன்றியங்களில் பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு கட்டும் பணிகளையும், 09 பேரூராட்சிகளில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு கட்டும் பணிகளையும் விரைந்து முடிக்க அறிவுறுத்த வேண்டும். பயனாளிகள் கட்டும் குடியிருப்பு கட்டிடத்திற்கு அந்தந்த காலகட்டத்திற்கு உரிய நிதியினை வழங்க வேண்டுமென்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு கட்டும் பணிகளையும் விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

மேலும், தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டுவதற்கு அரசு ரூ.12,000/- ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது. 2019-2020ம் ஆண்டில் 11 ஊராட்சி ஒன்றியங்களில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு 15992 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, தற்போது வரை 14827 பணிகள் முடிவுற்று, 1165 பணிகள் மீதமுள்ளது. மீதமுள்ள பணிகளையும் விரைந்து முடிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். இத்திட்டத்தில் பயன்பெற வசதியோ, இடமோ இல்லாத நபர்கள் சமுதாய சுகாதார வளாகத்தை பயன்படுத்தி சுகாதாரத்தை பேணி பாதுகாக்க வேண்டும் என்று பொதுமக்களிடையே எடுத்துக்கூற வேண்டும். மேலும், ஒவ்வொருவரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுகாதாரம் என்பது மிகவும் முக்கியம் என்பதையும், சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆரோக்கியமான கருத்துக்களையும் பொதுமக்களிடையே எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்றும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத்தலைவர்/விருதுநகர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.ப.மாணிக்கம் தாகூர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் (விருதுநகர்), திரு.ச.தங்கப்பாண்டியன் (இராஜபாளையம்), திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சுரேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.மங்களராமசுப்பிரமணியன், திட்ட இயக்குநர் (ஊரக வாழ்வாதார இயக்கம்) திரு.குருநாதன், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**